★ பக்கங்கள் 6 விலை சதம் 40

# ஈழநாடு

The EELANADU

Registered as a Newspaper at the General Post Office Sri Lanka under No. QD/8945/78

மலர்: 21 பங்குனி 7 [illegible] 21 இதழ் 38
யாழ்ப்பாணம் புதன்கிழமை 21-3-79

மத்திய கிழக்கில் வேலைவாய்ப்பு ஒழுங்குகள் ஆண், பெண் இருபாலாருக்கும் செய்துகொடுக்கப்படும்.
கடவுச்சீட்டு (PASSPORT)
விமான பயணச்சீட்டு

இந்தியா. ஈராக்
விசா ஒழுங்குகள், சகல வெளிநாட்டு தொடர்புகளுக்கும் எம்மிடம் தொடர்பு கொள்க!

குட்வில் (T) ரவல்
N. 635, ஆஸ்பத்திரி வீதி,
[சிங்கள பாடசாலைக்கு முன்பாக]
யாழ்ப்பாணம்

## ஜயப்பிரகாசர் உடல்நிலை கவலைக்கிடம்

பம்பாய், மார்ச், 20

சர்வோதயத் தலைவர் திரு ஜயப்பிரகாஷ் நாராயணின் உடல்நிலை மிகவும் கவலைக்கிடமாக இருப்பதாக இன்றிரவு வெளியான கடைசி வைத்திய அறிக்கை தெரிவித்தது.

UNIVERSITY OF SRI LANKA JAFFNA CAMPUS RECEIVED 21-3-79 PERIODICALS DIVISION LIBRARY

★ ஈழத்தமிழரின் முக்கிய பிரச்னை தீர்வுக்கு

# பாரதப்பிரதமரின் தலையீட்டை 'அமிர்' வற்புறுத்துவார்!

## நிருபர்கள் மாநாட்டில் தகவல்

### "புலி இயக்கத்துக்கும் தமிழர் விடுதலைக் கூட்டணிக்கும் தொடர்பில்லை!"

சென்னை, மார்ச். 20

"ஈழத்தமிழரின் அதிமுக்கிய பிரச்னைகளை மேலும் தாமதமின்றித் தீர்த்து வைக்க, பாரதப் பிரதமர் திரு. மொரார்ஜி தேசாய் தமது முழு செல்வாக்கையும் பயன்படுத்தவேண்டும். பாரதப் பிரதமர் தலையிட்டு எமது அவசிய பிரச்னைகளைத் தீர்த்துவைக்க வேண்டும் என்று நான் அவரிடம் கோரப்போகின்றேன். எங்களின் பிரச்னைகளை மிகவும் தெளிவாக இலங்கையில் கேட்டறிந்த பிரதமர் திரு. மொரார்ஜி தேசாய், இந்த விஷயத்தில் மிகவும் நியாயமாக நடந்து கொள்வார் என்ற நம்பிக்கை எமக்குண்டு."

சென்னையில் நடைபெற்ற பத்திரிகை நிருபர்கள் மாநாட்டில், இலங்கை எதிர்க் கட்சித் தலைவரும், தமிழர் விடுதலைக் கூட்டணி செயலாளர் நாயகமுமான திரு. அ. அமிர்தலிங்கம் மேற்கண்டவாறு கூறினார்.

திரு. அ. அமிர்தலிங்கத்திடம், பத்திரிகை நிருபர்கள் பல கேள்விக்கணைகளைத் தொடுத்தபோதும், திரு. அமிர்தலிங்கம் மிகவும் நிதானமாகவே உடனுக்குடன் பதிலளித்தார்.

இலங்கையில்-தமிழர் எதிர்நோக்கியுள்ள பல்வேறு கஷ்டங்கள், பிரச்னைகள் பற்றி மிகவும் ஆழமாக, தெளிவாக தெரிவித்த திரு. அமிர்தலிங்கம் பல பத்திரிகை நிருபர்களின் கேள்விகளுக்கு விரிவாகவே பதிலளித்தார்.

#### தமிழ் ஈழ பொருளாதாரம்

"இலங்கையில் தமிழ்ஈழம் அமைக்கப்படுமானால் பொருளாதாரத்துறையில் உங்களால் தனித்து இயங்க முடியுமா?" என்று நிருபர் ஒருவர் கேட்டதற்கு திரு. அமிர்தலிங்கம்; "நிச்சயமாக முடியும். அதற்கான திட்டங்கள் எம்மிடம் உண்டு" என்றார்.

#### 'புலி' இயக்கம்

"புலி இயக்கத்துக்கும் தமிழர் விடுதலைக் கூட்டணிக்கும் தொடர்புகள் உண்டா?" என்று ஒரு நிருபர் கேட்டபோது; "தொடர்புகள் கிடையாது. ஆனால், இலங்கை அரசு இதனை மிகவும் பெரிதுபடுத்துகிறது" என்று பதிலளித்தார்.

#### அரசியல் தொடர்பு

"உங்கள் கட்சிக்கும், இவ்

[6ம் பக்கம் பார்க்க]

## அரசியலை கைவிட்டால் மன்னிப்பு?

இஸ்லாமாபாத், மார்ச் 20

ஜனாப் சுல்பிகார் அலி பூட்டோ அரசியல் நடவடிக்கைகளை கைவிடுவாரானால், அவருக்கு மரண தண்டனையிலிருந்து தாம் மன்னிப்பு வழங்குவதாக பாகிஸ்தான் இராணுவ நிர்வாகி ஜெனரல் ஸியாவுல் ஹக் தெரிவித்துள்ளதாக சவூதி அரேபிய நாட்டு பத்திரிகைகள் இன்று செய்தி வெளியிட்டுள்ளன.

## பொலிசார் நடத்திய ஆட்சேப ஊர்வலம்!

[யாழ்ப்பாணம்]

பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவர் வேலைநீக்கம் செய்யப்பட்டதனால் "யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த சுமார் 50 பொலிசார் நேற்றுக் காலை, யாழ். நகர்வீதிகளில் ஆட்சேப ஊர்வலம் நடத்தினார்கள்.

சில மாதங்களுக்கு முன்னர் யாழ். கச்சேரி வாசலில் கேரதீவிலிருந்து வந்த வான் சாரதியையும் பிரயாணிகளையும் பொலிசார் தாக்கியதாகச் செய்யப்பட்ட புகாரைத் தொடர்ந்து யாழ். எம். பி. திரு. யோகேஸ்வரன் சம்பவம் நடந்த இடத்திற்கு நேரில் சென்று பார்வையிட்டபின்

[6ம் பக்கம் பார்க்க]

## தடை அகற்றப்பட்டது!

(கொழும்பு)

கட்டுநாயகா விமானநிலைய சுங்கப்பகுதியினரால் தடை செய்யப்பட்ட "இந்தியன் எக்ஸ்பிரஸ்" (17-ம், 18ம் திகதி) இதழ்கள் இலங்கை அரசாங்கத்தின் ஆலோசனையின் மீது, தடை அகற்றப்பட்டு வழமை போல் நேற்று விநியோகிக்கப்பட்டன.

## ஜி.சி.ஈ. உயர்வகுப்பு அனுமதி விரைவில் முடிவு தெரியும்

(யாழ்ப்பாணம்)

இவ்வருடத்திற்கான புதிய ஜி. சி. ஈ. உயர்தர வகுப்பில் மாணவர்களை அனுமதிப்பது தொடர்பாக இன்னும் ஒரு சிலதினங்களில் முடிவு செய்யப்பட்டு சுற்று நிருபம் ஒன்று சகல பாடசாலைகளுக்கும் அனுப்பப்படும் என்று வடபிராந்திய கல்விப் பணிப்பாளர் திரு. தி. மாணிக்கவாசகர் தெரிவித்தார்.

வடபிராந்தியத்தில் சுமார் 4 ஆயிரம் மாணவர்கள் ஜி. சி. ஈ. உயர்தர வகுப்பில் கல்வி கற்க தகுதி பெற்றவர்கள் என்று இவர்களது அனுமதி தொடர்பான அலுவல்களை யாழ். கல்வித் திணைக்கள பிரதம கல்வி அதிகாரி திரு. எஸ். பி. சிவபாதம் கவனித்து வருகிறார் என்றும் திரு. மாணிக்கவாசகர் தெரிவித்தார்.

சில தொகுதிகளில் புதிய வகுப்புக்களை ஆரம்பிக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாகவும் இதுகுறித்து விரைவில் முடிவு செய்யப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

மாணவர் அனுமதி குறித்து கடந்த வாரம் கொழும்பில் கல்வி அமைச்சின் அதிகாரிகளைக் கொண்ட மகாநாடு ஒன்று நடைபெற்றதாகவும் அவர் தெரிவித்தார். [இ]

## ஓய்வு பெற்ற விஞ்ஞான ஆசிரியருக்கு மீண்டும் வேலை?

[யாழ்ப்பாணம்]

வடபகுதியில் இளைப்பாறிய விஞ்ஞான ஆசிரியர்கள் மீண்டும் சேவையில் சேர்த்துக் கொள்ளப்பட இருக்கின்றனர்.

இதுகுறித்து கல்வித் திணைக்களம் ஆலோசித்து வருகின்றது.

ஏப்ரலில் புதிதாக ஆரம்பமாக இருக்கும் புதிய ஜி. சி. ஈ. உயர்தர வகுப்புக்களினால் ஆசிரியர் பற்றாக்குறை ஏற்படும் பட்சத்தில் ஓய்வுபெற்ற ஆசிரியர்களை மீண்டும் சேவையில் சேர்க்க ஆலோசிக்கப்பட்டு வருகிறது. (இ)

யாழ். நவீன மார்க்கட் கடைகள்

## ரெண்டரில் 25 வீதம் குறைவு

### பழைய கடைக்காரர் சம்மதம்!

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் நவீன மார்க்கட் இரண்டாம் கட்டப் பகுதிகளில் உள்ள கடைகளில் 7 கடைகள் மட்டும், தற்போது கோரப்பட்டுள்ள ரெண்டரிலும் பார்க்க 25 வீதம் குறைத்து, முன்னர் அப்பகுதியில் கடைவைத்திருந்த கடைக்காரர்களுக்கு வழங்கப்படவிருக்கிறது.

யாழ்ப்பாணம் மாநகர சபை ஆணையாளர் திரு. கே. சிவஞானத்துடன், கடைக்காரர்கள் நேற்று முன்தினம் இருதடவை நடத்திய பேச்சுவார்த்தையின் போது, டெண்டரிலும் பார்க்க 25 வீதம் குறைத்து கடைகளை எடுக்க கடைக்காரர் சம்மதித்துள்ளதாகத் தெரியவருகிறது.

நவீன மார்க்கட் கீழ்பகுதியில் 14 கடைகள் உள்ளன. இதில் கூடிய தொகையில் ரெண்டர் கோரியவர்கள் முதலில் 7 கடைகளை தெரிவு செய்து எடுப்பார்கள். அதன் பின் மற்ற 7 கடைகளும், பழைய கடைக்காரர்களுக்கு 25 வீதம் குறைத்து மாநகர சபை சட்ட திட்டங்களுக்கு அமைய வழங்கப்படும்.

ஆணையாளருடன் பேச்சுவார்த்தை நடத்திய போது, தாங்கள் முன்பு கடைகள் வைத்திருந்த பொன்னம்பலம் வீதியிலேயே தங்களுக்கு கடைகள் வேண்டுமென கடைக்காரர்கள் கேட்டதாக தெரிய வருகிறது.

ஆணையாளர் இதற்கு சம்மதிக்க மறுத்து, 7 கடைகளையும், ரெண்டர் கோரியவர்கள் எடுத்தபின், பொன்னம்பலம் வீதியில் கடைகள் காலியாக இருந்தால், மட்டுமே வழங்க முடியும் என்று கூறியதாகவும் தெரிய வருகிறது.

இக்கடைகளுக்கு ரெண்டர் கோரப்பட்ட கூடியதொகை ஒரு லட்சத்து ஏழாயிரம் ரூபாவாகும். இத்தொகையை கோரியவர் முதலில் 14 கடைகளில் தமக்கு விரும்பியதை எடுத்துக் கொள்வார்கள். அதே போல், இரண்டாவது கூடிய தொகை ரெண்டர

[6-ம் பக்கம் பார்க்க]

## வரி விளம்பரம்

### தேவை

பாண்வேலை தெரிந்தவர்களும் 'பிஸ்கட்' வேலைதெரிந்த பெண்களும் உடனடியாக தேவைப்படுகின்றார்கள். நேரில் தொடர்புகொள்ளவும். நியூ பாரத் பேக்கவுஸ் 86/1, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம். 1949

அனுபவம் வாய்ந்த பெண் ஆங்கில தட்டெழுத்தாளரும், வரவேற்பாளரும் உடனடியாக கீழ்க்காணும் விலாசத்திற்கு விண்ணப்பிக்கவும். குட்வில் (T)ரவல், N. 635 ஆஸ்பத்திரி வீதி, (சிங்கள பாடசாலைக்கு முன்பாக) யாழ்ப்பாணம். 1953

பகல் இரவு காவல் வேலைக்கு நடுத்தர வயதுடையவர்கள் தேவை. காவல்துறையிலிருந்து இளைப்பாறியவர்கள் விரும்பத்தக்கது. நேரில் மனுச்செய்க. அரஸ்கோ இண்டஸ்றியல் எக்ஸ்போட் லிமிட், 163, கண்டி வீதி, யாழ்ப்பாணம். 1950

அப்பம்போடத் தெரிந்தவரும் டீமேக்கரும் உடன் தேவை. நேரில் விண்ணப்பிக்கவும். நியூவேல் விலாஸ், நல்லை முருகன் பின்வீதி, யாழ்ப்பாணம். 1958

### விற்பனைக்கு

அண்மையில் இறக்குமதி செய்யப்பட்ட 8 ஸ்ரீ 6794 போட் எஸ்கொட் (FORD ESCORT 1100 C. C) விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்க. T. மரியாம்பிள்ளை, நாரந்தனை மேற்கு, ஊர்காவற்றுறை. 1955

நல்லநிலையிலுள்ள EY 3000 தொடர்பிலக்கமுடைய சோமசெற் கார் விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்க. 67, பிறவுண்வீதி, யாழ்ப்பாணம். 1947

### பயிற்சி

மத்திய கிழக்கு நாடுகளில் கட்டிட வேலைகளுக்குத் தொழிலாளர் தேவை. Diploma in Building Technology பயிற்சி விரைவில் ஆரம்பமாகின்றது. National Institutes 57, பாமிசோல் வீதி, யாழ்ப்பாணம். 1892

வெல்டிங் (Electric Arc & Gas) இலெக்றிக் வயறிங், றேடியோ (Transistor), Auto Electricians Certificate. Diploma In Building Technology முதலிய பயிற்சிகள், வெளிநாட்டு முறையில் நடாத்தப்படும். ஆங்கிலமும் முதலுதவிப் பயிற்சியும் இலவசம். National Institutes, 57, பாமிசோல் வீதி, யாழ்ப்பாணம். 1891

### பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

மல்லாகம் மாவட்ட நீதிமன்றத்தில்

அளவெட்டி, வாரிசிமாவைச் சேர்ந்த காலஞ்சென்ற கந்தையா வயித்திலிங்கம் என்பவரின் மரண சாதனமில்லா மரணச் சொத்தினதும் உடைமைப் பொருள்களினதும் விடயத்தில்

மரணமெய்தியவர் கந்தையா வயித்திலிங்கம் கைம்பெண் சிவசிதம்பரம், வாரிசியா, அளவெட்டி. மனுதார்.

மரணசாதன நியாயாதிக்க இல: T/11

1. வயித்திலிங்கம் சிறிஸ் காந்தன்,
2. வயித்திலிங்கம் ஞானலிங்கம்,
3. செல்வராணி வயித்திலிங்கம் மகள்
4. வயித்திலிங்கம் தியாகலிங்கம்
5. வயித்திலிங்கம் வரதலிங்கம்
6. வயித்திலிங்கம் கணேசலிங்கம், பராயமடையாதோர்
7. வயித்திலிங்கம் மகள் செல்வமதி பராயமடையாத இவர்கள்மூவரினதும் பாதுகாவலராக
8. கந்தையா இராமநாதன் எல்லோரும் வாரிசியா, அளவெட்டி

எதிர்மனுதாரர்கள்

மேலேயுள்ள இலக்கங்கொண்ட மரணசாதன வழக்கு மேலே பெயர் குறிப்பிட்ட இறந்து போனவரின் மரணச் சொத்தை நிருவகிப்பதற்காக மேற்படி நீதிமன்றில் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்க பின்னுறுதிக் கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரும் 1979 ஆம் ஆண்டு ஆனி மாதம் 1ஆந் நாளன்று முற்பகல் 9-00 மணிக்கு இந் நீதிமன்றின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக் கட்டளை ஏன் முற்றுனதாக்கப்படலாகாதெனபதற்கு காரணங்காட்டுமாறு இத்தால் தேவைப் படுத்தப்படுகின்றீர்.

நீதிமன்றக் கட்டளைப்படி

ஆர். ஜெயராஜசிங்கம்
[ஒப்பம்]
பதிவாளர்

1978-07-17 ஆந் திகதி என்னால் வரையப்பட்டது.

சு. நடராசா
[ஒப்பம்]
மனுதாரின் சட்டத்தரணி

1948

---

பாலைதீவு இறங்குதுறை

# இருபது வருட காலமுயற்சி இன்னும் கைவிடவில்லை!

## கத்தோலிக்க யாத்திரிகர்கள் கவலை

(யாழ்ப்பாணம்)

பாலைதீவில் இறங்குதுறை இல்லாததனால் இம்மாதம் நடைபெற்ற திருவிழாவின் போது பல்லாயிரக்கணக்கான யாத்திரிகர்கள கஷ்டத்திற்குள்ளானார்கள.

பெண்கள், குழந்தைகள உட்படச் சகல யாத்திரிகர்களும் 4 அடி தண்ணீரில் இறங்கியே நடந்துசென்று கரை யேறவேண்டியிருந்தது. காற்றினாலும் கடல்கொந்தளிப்பினாலும் யாத்திரிகர்கள கஷ்டப்பட்டனர். இதனால் பயணம் ஒருநாள தாமதம் ஏற்பட்டது. குடிநீர் வசதியின்றியும் மலகூட வசதியின்றியும் யாத்திரிகர்கள கஷ்டப்பட்டனர்.

### மாநகரசபைத் தீர்மானம்

பாலைதீவுக்கு இறங்குதுறை அமைக்கவேண்டும் என்று அரசைக் கோரும் தீர்மானமொன்று 1956 பெப். 21ம் தேதி யாழ் மாநகரசபையில் நிறைவேற்றப்பட்டது,

திரு ஏ ஜோசெப்பினால் முன்மொழியப்பட்டு திரு எஸ் இராசரத்தினத்தால் வழிமொழியப்பட்ட அத்தீர்மானத்தில் கூறப்பட்டிருப்பதாவது;

பாலைதீவு அர்ச் அந்தோனியார் கோவில் விழாக்காலத்தில் பல்லாயிரக்கணக்கானகத்தோலிக்க மக்களும் பிறமதத்தவரும் இப்புனித ஸ்தலத்திற்கு யாத்திரை செய்வதால் அங்கோர் இறங்குதுறை அரசாங்கத்தால் அமைக்கப்படவிருப்பதால் அந்த இறங்குதுறை வேலையை உடனடியாக மேற்கொள்ளுமாறு போக்குவரத்து அமைச்சரை இச்சபை கேட்டுக்கொள்கின்றது.

### ஜி. ஜி. வலியுறுத்து

பாலைதீவு இறங்குதுறையை உடனடியாக நிறுவுமாறு 1956ம் ஆண்டு யாழ்ப்பாண எம். பி. திரு. ஜி ஜி. பொன்னம்பலமும் வலியுறுத்தினார். அப்போது யாழ். அரசாங்க அதிபராக இருந்த திரு. எம். ஸ்ரீகாந்தாவும் அரசிடம் இதை வலியுறுத்தினார். இதைத் தொடர்ந்து பாலைதீவில் இறங்குதுறை அமைக்க அரசு முடிவுசெய்தது.

1956ம் ஆண்டு பெப்ரவரி 1ந் தேதி பாலைதீவு சென்ற அரசாங்கப் பொறியியலாளர் திரு கே. வி துரைராஜசிங்கம் 550 அடி நீளமான இறங்குதுறை அமைக்க அரசுக்குச் சிபாரிசு செய்திருந்தார்.

### துரையப்பா முயற்சி

பின்னர் 1961ம் ஆண்டு ஆகஸ்ட் 26ந் தேதி யாழ்ப்பாண எம். பி. திரு. அல்பிரட் துரையப்பா, அப்போதைய போக்குவரத்து அமைச்சர் திரு. பி ஜி. கலுகல்லையிடம் இறங்குதுறை அமைக்குமாறு கோரியதைத் தொடர்ந்து 15 ஆயிரம் ரூபா ஒதுக்கப்பட்டது இறங்குதுறை அமைக்க அப்பணம் போதாதெனப் பொறியியலாளர் தெரிவித்ததைத் தொடர்ந்து அத்திட்டம் நிறைவேறவில்லை

பாலைதீவு அந்தோனியார் கோவில் மூப்பர் திரு. அ. ச. அந்தோனிப்பிள்ளை, மற்றும் யாத்திரிகர்கள் விரைவில் இறங்குதுறை அமைத்துத் தருமாறு அரசிடம் கோரிக்கை விடுத்துள்ளார்கள். (க-அ)

---

இரணைதீவுக் கொலை வழக்கு

# 'எதிரியைக் கிராமசபை அறைக்குள் பூட்டியிருந்தனர்''

(யாழ்ப்பாணம்)

''எதிரியை கிராமசபை அலுவலக அறைக்குள் பூட்டி வைத்திருந்தனர், கிராம சபைக்கு வெளியில் சுமார் 200 பேர் நின்றனர்,

இரணைதீவு கொலைவழக்கில் சாட்சியமளித்த செபஸ்தி பாஸ்கரன் மேற்கண்டவாறு கூறினார்.

இவ்வழக்கு யாழ் மேல் நீதிமன்றத்தில் நீதிபதி ஜனாப் எம் ஜ மில் முன்னிலையில் நேற்று இரண்டாவது தினமாக விசாரணைசெய்யப்பட்டது.

இவ் வழக்கில் 1972 நவம்பர் 10 தேதி இரணைதீவில் அந்தோனி மைக்கலைக் கொலை செய்ததாக மரியாசலின் மீது குற்றஞ்சாட்டப் பட்டிருந்தது

எதிரி சார்பில் சட்டத்தரணி ஜிம்மி இராசத்தினம் ஆஜரானார். அரசதரப்பில் சட்டத்தரணி ஆர் ஸ்ரீரஞ்சன் வழக்கை நடத்தினார்.

செபஸ்தி பாஸ்கரன் குறுக்கு விசாரணையின்போது மேலும் கூறியதாவது: நான் கிராம சபைத் தலைவர் வீட்டுக்குப் போனேன், தொப்பியாஸ், சந்தியாகோ இருந்தார்கள். தலைவர் என்னிடம் இவர்கள சடலம் ஒன்றைக் கண்டதாகக் கூறுகிறார்கள் என்றார். அங்கு சூசைதாசன் இருக்கவில்லை. என்னுடன் நாலு பேர் இருந்தனர்.

நான் இருக்கும்போது தலைவர் சடலத்தைப் பார்க்கச் செல்லவில்லை. என்னை பூநகரி டி ஆர் ஓ வுக்கு அறிவிக்கும்படி சொன்னார், நான் பூநகரிக்குப் புறப்பட்டேன்'

11ம் தேதி மாலை திரும்பிவந்தேன். பூநகரிக்குப்போகமுடியவில்லையென்றும், வாகன வசதியில்லையென்றும் தலைவரிடம் கூறினேன்.

இறந்தவர் என்மைத்துனர். அவர் இறந்துவிட்டார் என்று எனக்கு 11ம் தேதி மாலை 4 மணிக்கே தெரியும். நான் சடலத்தைப்போய்ப் பார்க்கவில்லை. வீட்டிற்குச் சென்று படுத்துவிட்டேன். 12ம் தேதி காலை 10மணிக்குப் போனேன். அப்பொழுது பொலிஸார் வந்திருந்தார்கள். கிராம சபையில் பொலிசாரை சந்தித்தேன். கிராம சபையில் வைத்து என் வாக்குமூலம் பதியப்பட்டது. வெளியில் 300 பேர் வரை நின்றனர்.

விசாரணை தொடர்ந்து நடைபெற்றுவருகிறது. [க-அ]

---

## கேள்வி அறிவித்தல்

### சுன்னாகம் பட்டணசபை

கீழ்க்காணும் வேலைகளுக்கான சீல் வைத்த கேள்விகள் என்னால் 1979-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 4-ந் திகதி முற்பகல் 10 மணி வரை ஏற்றுக்கொள்ளப்படும். கேள்விப்பத்திரங்கள், 1ம் வேலைக்கு ரூபா 25,000/-க்கு மேல் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தகாரர்களிடமிருந்தும், 2-ம், 3-ம், 4-ம் வேலைகளுக்கு ரூபா 15,000/-க்கு மேல் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தகாரர்களிடமிருந்தும் கோரப்படுகின்றன. அவ்வவ் வேலைகளுக்கெதிரே குறிப்பிடப்பட்டுள்ள கேள்விப்பத்திரப் பணமும், கேள்விப் பிணைப் பணமும் 1979-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 3-ந் திகதி பகல் 12-15க்கு முன்னதாகச் செலுத்தி கேள்விப் பத்திரங்களைப் பெற்றுக்கொள்ளலாம். மேற்கொண்டு விபரங்களை எனது காரியாலயத்தில் அலுவலக நேரங்களில் அறிந்துகொள்ளலாம்.

| | வேலையின் பெயர் | கேள்விப் பத்திரப் பணம் | கேள்விப் பிணைப் பணம் |
|---|---|---|---|
| 1. | சபாபதிப்பிள்ளை வீதி திருத்தம் | 25/- | 200/- |
| 2. | இந்தனை வீட்டுத்திட்டத்தில் இணறு வெட்டிக் கட்டல் | 20/- | 100/- |
| 3. | அம்பலவாணர் வீதி திருத்தம் | 20/- | 100/- |
| 4. | 2-ம் வட்டாரம் சபாபதிப்பிள்ளை வீதியிலிருந்து போகும் ஒழுங்கை திருத்தம் | 20/- | 100/- |

பொ. பாலசிங்கம்,
விசேட ஆணையாளர்,
சுன்னாகம் பட்டணம்.

விசேட ஆணையாளர் அலுவலகம்,
சுன்னாகம் பட்டணம்,
19-3-79.

1954

---

## சூறாவளி நிதி கையளிப்பு

(வண்ணார்பண்ணை)

மட்டுவில் வடக்கு மோகனதாஸ் சனசமூக நிலையத்தினர் சூறாவளி நிதிக்கென நிலைய உறுப்பினர்கள் மூலம் சேர்த்த பணத்தை கடந்த வெள்ளிக்கிழமை யாழ். மாவட்ட அரசாங்க அதிபரிடம் கையளித்தனர்.

யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் திரு. லயனல் பெர்னாண்டோ 384 ரூபாவை நிலையப் பிரதிநிதிகளிடம் பெற்றுக்கொண்டு நன்றி தெரிவித்தார்.

மேற்படி சனசமூக நிலையத் தலைவர் திரு எஸ். சந்தியாபிள்ளை, உபசெயலாளர் திரு. என். செல்வராசா, செயற்குழு உறுப்பினர் திரு. கே. கப்பையா ஆகியோர் அரசாங்க அதிபரிடம் கையளித்தனர். [இ]

---


சங்கானை ப. நோ. கூ. சங்கம்

## விளம்பரம்

வெண்காயம் மிளகாய்ச் செய்கையாளருக்கு

### ஓர் நற்செய்தி

வெண்காயம், மிளகாய் பயிர்களைப் பாதிக்கும் கொடூர நோய்களைத் தடுப்பதற்கான சுமிசிடின் கிருமிநாசினி 4 அவுன்ஸ், 2 அவுன்ஸ் போத்தல்கள் எம்மிடம் இருப்பில் உள்ளன. இவற்றை மலிவான விலையில் விற்பனை செய்வதற்கு ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

தேவைப்படுவோர் உடன் எம்மிடம் தொடர்பு கொள்ளவும்.

பொதுமுகாமையாளர்
சங்கானை ப. நோ. கூ. சங்கம்

சங்கானை,
15-3-79 1919

# மக்கள் கருத்து

## நெல்லியடி பஸ்நிலையமும் பிரயாணிகள் அவதியும்

வடமராட்சியில் முக்கிய பஸ் நிலையங்களில் கேந்திரமாக விளங்கும் நெல்லியடி பஸ் நிலையம் கடந்த பல வருட காலமாகப் பஸ் பிரயாணிகளின் அசௌகரியத்தையும், அவலநிலையையும் தாங்கி நிற்கின்றது.

இந்த பஸ்நிலையத்தில் 10 ஆயிரம் ரூபா செலவில் பஸ் பிரயாணிகள் தங்கு மண்டபமொன்று நிறுவப்பட்டுள்ளபோதிலும், இப்பிரயாணிகள் தங்கு மண்டபம் போதிய இடவசதியின்றி மிகவும் சிறிதாக இருப்பதால் பிரயாணிகள் பெரும் இடைஞ்சல் அனுபவித்து வருகின்றனர்.

இந்நிலையத்தில், பருத்தித்துறையிலிருந்து கொடிகாமம் ஊடாகத் தூர இடங்களுக்குச் செல்லும் பஸ் வண்டிகளும், மானிப்பாய், நவாலி, மூளாய், சங்கானை, காங்கேசன்துறை, யாழ்ப்பாணம் ஆகிய இடங்களுக்குச் செல்லும் பஸ்வண்டிகளும் தரித்துச் செல்லுகின்றன.

ஆனால், இந்த பஸ்வண்டிகளின் நேர அட்டவணையோ, எந்த பஸ்வண்டி, எங்கே செல்லுகிறதென்ற விபரங்களோ, வழிகாட்டிகளோ இல்லாமல் இருப்பதால் பஸ் பிரயாணிகள் தடுமாற்றமடைவதுடன், பஸ்வடிண்களை அடையாளம் கண்டுபிடிப்பதற்காக ஓட்டப்போட்டி நடாத்த வேண்டிய நிலையில் உள்ளனர்.

இங்குள்ள பஸ் பிரயாணிகள் தங்கு மண்டபத்தை ஆண்களே ஆக்கிரமித்துக் கொள்வதால், பெண் பிரயாணிகள் கடும் வெய்யிலில் பஸ்ஸுக்காகக் காத்து நிற்க வேண்டியுள்ளது. இப்பிரயாணிகள் தங்கு மண்டபம், ஐம்பது பிரயாணிகளுக்கு மேல் கொள்ளமுடியாத நிலையில் இருப்பதே இப்பரிதாப நிலைக்குக் காரணமாகும். இதனால் மாணவிகள் பஸ்நிலையத்தின் அருகிலுள்ள கடைத் தாழ்வாரங்களிலேயே ஒதுங்கி நின்று பஸ்ஸைப் பிடிக்கவேண்டியுள்ளது.

இந்த பஸ் நிலையத்தில், பொது மலசலகூடம் ஒன்று இல்லாததும் பெருங் குறையாக இருந்துவருகின்றது. இதனால் சுகாதாரத்திற்குப் பங்கம் மேற்படுகின்றது.

நெல்லியடி ஒரு முன்னேற்றமடைந்த பட்டினமாக விளங்கி வருகின்றபோதிலும், நெல்லியடிப் பட்டினசபையோ, இ.போ.ச.வோ இதுவரை காலமும் இக்குறைகளைப் போக்க முன்வராமல் இருப்பது இப்பகுதி மக்களுக்கும், பஸ் பிரயாணிகளுக்கும் அதிருப்தியையும், விசனத்தையும் ஏற்படுத்தியுள்ளது. இக்குறைகள் வெகு விரைவில் தீர்த்துவைக்கப்பட்டு, நவீன பஸ்நிலையமாக இயங்கும் நாள் வருமோ என்று பிரயாணிகள் ஏங்குகின்றனர்.

எம்.ஜே ஏ, சுபேந்திரராஜன்
புனித அந்தோனியார் கோவிலடி,
கரவெட்டி.

## மடிநெல்லுக்கு விடிவு உண்டா?

யாழ். மாவட்ட 1978/79 காலபோக நெல் கொள்வனவு முடிவை நெருங்கிக்கொண்டிருக்கிறது.

காலபோக அறுவடையின் போது எதிர் பாரது மழையினால் பல பேருடைய நெற்குதிர்களும், அறுவடை செய்த பயிரும் நனைந்து மடி நெல்லாகியுள்ளது.

இந்த நெல்லை ப. நோ. கூ. சங்கங்கள் ஏற்க மறுக்கின்றன இந்நிலையில் கஷ்டம் காரணமாக விவசாயிகள் வெளி வியாபாரிகளுக்கு மூடை ஒன்றுக்கு ஐம்பது ரூபா வரையில் நட்டத்தில் விற்கவேண்டியுள்ளது. விவசாயிகளுக்கு இந்த நிலை நல்லதா?

மடி நெல்லின் தரத்திற்கேற்ப, அரசு ஒரு விலையை நிர்ணயஞ்செய்து சங்கங்கள் மூலம் கொள்வனவு செய்வதற்குச் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் ஆவன செய்வார்களா?

அப்படிச் செய்வதன் மூலம் விவசாயிகளின் வளைந்த முதுகுகளைச் சற்று நிமிரச்செய்து, அவர்களின் நல்லெண்ணத்தைப் பெறுவார்களா?

வே. கோவிந்தபிள்ளை
கமக்காரன்,
முரசுமோட்டை.

## 'நாடுசுபிட்சம்பெற தொழில்நுட்ப அறிவு முக்கியம்'

-உடுப்பிட்டி எம். பி.

[நெல்லியடி]

"பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் அமைந்துள்ள இலங்கை போன்ற நாடுகளுக்கு தொழில்நுட்ப அறிவை விருத்திசெய்வதன் மூலமே விமோசனமும் விடிவும் ஏற்படும். இதனை மனதிற்கொண்டே தேவரையாளி இந்துக்கல்லூரியிலும் வேலையற்ற படித்த மாணவர்களுக்கு முழுநேர தொழில் நுட்பப்பயிற்சி அளிக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன"

மேற்கண்டவாறு உடுப்பிட்டித்தொகுதிப் பாராளுமன்ற உறுப்பினர் திரு த. இராசலிங்கம் தேவரையாளி இந்துக்கல்லூரியில் தொழில் நுட்பப் பயிற்சி பெற்று வெளியேறிய முதற்குழுவினரான 62 பேருக்குச் சான்றிதழ்களை வழங்கும்போது குறிப்பிட்டார். பயிற்சி பெற்று வெளியேறிய இம் மாணவர்களுக்குப் பாடசாலை அதிபர் திரு. எஸ். சீனித்தம்பி தலைமையில் தேநீர் விருந்துபசாரமும் அளிக்கப்பட்டது உடுப்பிட்டி வட்டாரக் கல்வி அதிகாரி திரு க ஈசுரபாதமும் இவ்வைபவத்தில் கலந்து கொண்டார். திரு இராசலிங்கம் எம் பி தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

பாடசாலைகளில் 10 ஆண்டுகள்வரை மாணவர்கள் கல்வி பயில்வதன் காரணமாக தமக்கென சுயமாக வேலைவாய்ப்பைத் தேடிக்கொள்ளமுடியாமலும், மனவேதனையுடனும் பெற்றோருக்கு சுமையாகவும் காணப்படுகின்றார்கள் இங்கே அளிக்கப்படும் பயிற்சி ஆறு மாதப் பயிற்சி [illegible] எனினும் மாணவர்கள் [illegible]தில் ஆறுதலும் நம்பிக்கையும் ஏற்பட்டுள்ளதையும் அறிய முடிகின்றது. இப்பயிற்சி தொழில்களை சுயமாகத் தொடங்கவும் ஆர்வத்தை அளிக்கின்றது.

இங்கு தரப்படும் பயிற்சிபூரணமானது எனக் கூறமுடியாதெனினும் தொழிலுக்கான பரந்த ஆரம்ப பயிற்சி அளிக்கப்பட்டதை மறுக்கமுடியாது மாணவர்கள் தங்களின் பயிற்சியில் பூரணமான அறிவைப் பெற முயற்சி செய்தல் அவசியமாகும் ஒன்றோடு ஒன்று தொடர்புடைய புதிய பயிற்சி நெறிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன. அப்பயிற்சி நெறிகளையும் கற்றுத்தேறவேண்டும்

அதிபர் திரு எஸ் சீனித்தம்பி நன்றிதெரிவித்துப் பேசினார்.

[அ]

"கூட்டணியில் எனக்கெதிரான கோஷ்டி

# குற்றச்சாட்டுகளை ஜோடித்து எனக்கு எதிராக சதித்திட்டம்

## மட்டக்களப்பு முதல்வர் 'இராசு' கூறுகிறார்

[மட்டக்களப்பு]

"என் அரசியல் ஆளுமைக்கு களங்கம் கற்பிக்க தமிழர் விடுதலைக்கூட்டணியின் தலைமைப்பீடம் கங்கணம்கட்டி வருகிறது. அதற்காக பல சதிகள் நடக்கின்றன,

இவ்வாறு மட்டக்களப்பு முதல் எம் பி திரு செ இராசதுரை அடுத்த பாராளுமன்றக்கூட்டத்தில் தான் எவ்வாறு நடந்துகொள்ளவிருக்கிறார் என்பதை விளக்குவதற்காக தமது இல்லத்தில் கூட்டிய பத்திரிகை நிருபர்கள் மகாநாட்டில் தெரிவித்தார்.

திரு இராசதுரையின் ராஜினாமாவை கூட்டணி ஏற்கவில்லை என்று தெரிவித்து திரு அமிர்தலிங்கம் பாராளுமன்ற செயலாளருக்கு அனுப்பிய கடிதம்பற்றி பிரஸ்தாபித்தபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

"நீங்கள் ராஜினாமா செய்து வெளியேறக் கூட்டணியினர் விடமாட்டார்கள் போலிருக்கிறதே இதற்கு என்ன சொல்லுகிறீர்கள்? என்று நிருபர் ஒருவர் கேட்ட கேள்விக்கு "பொறுத்துப் பொறுத்துப் பார்த்து பாகனுடைய திஷ்டூரம் தாங்கமுடியாமல் குதிரை அறுத்துக்கொண்டு ஓடிய பின்னர் லாயத்தின் கதவை இழுத்துமூடமுற்படும் புத்திசாலிகளைப்பற்றி என்ன கூறவிருக்கிறது" என்றார்.

திரு இராசதுரைக்கு எதிரான பாரதூரமான குற்றச்சாட்டுக்கள் உட்பட பல குற்றச்சாட்டுக்கள்மீது கூட்டணியின் ஒழுங்கு நடவடிக்கைக் குழு விசாரணை நடத்திவருகிறது" என்று திரு அமிர்தலிங்கம் தமது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளாரே அந்தப் பாரதூரமான குற்றச்சாட்டுக்கள் எவை? என்று நிருபர்மேலும் கேட்டபோது திருஇராசதுரை கூறியதாவது;

### பாரதூரமான குற்றச்?

இந்த நாட்டின் பிரதமர் திரு ஆர் பிரேமதாசா கலந்துகொண்ட ஒரு கூட்டத்தில் நான் மட்டக்களப்பின் பின்தங்கிய நிலைபற்றி எடுத்துக் கூறியதுதான் அவர்கள் கருதும் 'பாரதூர்மான' குற்றச்சாட்டு அந்தக் கூட்டத்தில் கட்சிக்கு விரோதமாக எந்த ஒரு வார்த்தையும் நான் பேசியதில்லை

என்னிடம் அவர்கள் விளக்கம்கேட்ட 29-10-78 தேதியிட்ட கடிதத்தில் பிரேமதாசாவுக்கு அளிக்கப்பட்ட வரவேற்பில் நான் கலந்துகொண்டதுபற்றியே கேட்டிருந்தார்கள் அந்தக் கடிதத்திலிருந்த வாசகம் இதுதான்

"அமைச்சர்களுக்கு அளிக்கப்படும் பொதுவரவேற்பு வைபவமெதிலும் கூட்டணிப்பாராளுமன்ற உறுப்பினர்கள் கலந்துகொள்ளக்கூடாது என்ற கூட்டணியின்முடிவுக்கு மாறாக மட்டக்களப்பு மாவட்டத்தில் பிரதமர் திரு ஆர் பிரேமதாசாவுக்கு அளிக்கப்பட்ட பொதுவரவேற்பில் நீங்கள் கலந்து கூட்டணிக் கொள்கைக்கு முரண்பாடான கருத்துக்களை தெரிவித்ததாக பத்திரிகைச் செய்திகள் கூறுகின்றன. இவை உண்மையாயின் தங்களின் விளக்கத்தை 15-11-78க்கு முன் அமைப்பு நிருவாகச் செயலாளருக்கு அனுப்பி வைக்குமாறு 29-10-78ல் கூடிய கூட்டணியின் மத்திய செயற்குழு ஏகமனதாக தீர்மானித்துள்ளது. இதை செயற்குழுவின் பணிப்பின்படி உங்களுக்கு அறிவிக்கிறேன், கா பொ. இரத்தினம், அமைப்பு நிருவாக செயலாளர்.

இதன்பின்னர் எனக்கு அனுப்பப்பட்ட 23-1-79 கடிதத்தில் மேலே தரப்பட்ட ஒரு குற்றச்சாட்டு ஒன்பது குற்றச்சாட்டாக விஸ்தரிக்கப்பட்டிருந்தன, அவை வருமாறு:

### ஒன்பது குற்றச்சாட்டு

30-7-78ல் த. வி. கூ. நடவடிக்கைக் குழு அமைச்சர்களுக்கு அளிக்கப்படும் வரவேற்புவைபவம் எதிலும் கூட்டணிப் பா உ எவரும் கலந்துகொள்ளக் கூடாது என்று தீர்மானித்திருந்தும் அதற்கு மாறாக

[1] 25-10-78ம் திகதி மட்டக்களப்பு ஒட்டமாவடியில் பிரதமர் திரு ஆர் பிரேமதாசா அவர்களுக்கு அளிக்கப்பட்ட பொதுவரவேற்புக் கூட்டத்தில் நீங்கள் கலந்துகொண்டதாலும்,

[2] 26-10-78ம் திகதி மட்டக்களப்பு நகரத்தில் பிரதமர் திரு. ஆர். பிரேமதாசாவுக்கு அளிக்கப்பட்ட பொதுவரவேற்புக் கூட்டத்தில் கலந்துகொண்டதாலும்,

[3] மேற்குறிப்பிட்ட கூட்டங்களில் நீங்கள் வெளியிட்ட கருத்துக்கள் கூட்டணியின் கொள்கைக்கு முரண்பாடானவையாகப் பத்திரிகைச்செய்திகளின்படி தோற்றுவதாலும்,

[4] இத் திகதி வரை அச்செய்திகளை மறுத்து நீங்கள் எவ்வித விளக்கமும் தெரிவிக்காதபடியாலும்,

[5] அவற்றை யொட்டி உங்கள் விளக்கத்தை 15-11-78க்கு முன் அனுப்பிவைக்குமாறு கோரி மத்திய செயற்குழுவின் ஏகமனதான தீர்மானப்படி 29-10-78ம் திகதி அமைப்பு நிருவாகச் செயலாளர் அனுப்பிய கடிதத்திற்கு இத் திகதிவரை எப்பதிலும் கிடைக்காததாலும்,

[6] மேற்கூறிய கடிதத்தை யொட்டித் தங்களுக்கு நினைவுறுத்தி தங்கள் விளக்கத்தை செயற்குழுக் கூட்டத்தில் சமர்ப்பிப்பதற்கு அனுப்பி வைக்குமாறு 29-12-78ல் அமைப்பு நிருவாகச்செயலாளர் அனுப்பிய கடிதத்திற்கு தங்கள் பதில் கிடைக்காதபடியாலும்,

[7] தங்களிடம் விளக்கம் கோர மத்தியசெயற்குழு 29-10-78ல் எடுத்த தீர்மானப்படி தங்களிடம் விளக்கம் கோரிய பின்பும் களுவன்கேணியில் நீதிஅமைச்சர் திரு கே டபிள்யூ தேவநாயகம் அவர்களுக்கு அளிக்கப்பட்ட வரவேற்பில் தாங்கள் கலந்துகொண்டு உரையாற்றியதாக 4-1-79ம் திகதி வீரகேசரிப் பத்திரிகைச் செய்தி கூறுவதாலும்.

(8) அச்செய்திக்கு எவ்வித விளக்கமோ மறுப்போ தாங்கள் கொடுக்காதபடியாலும்.

(9) இவ்விடயங்கள்பற்றி எழுத்து மூலமோ நேர்முகமாகவோ இதுவரை தங்களிடமிருந்து எவ்வித விளக்கமும் கிடைக்காதபடியாலும்.

மேற்குறிப்பிட்ட விடயங்கள் எல்லாவற்றுக்கும் தங்களுடைய தெளிவான விளக்கத்தை 7-2-79க்கு முன் அமைப்பு நிருவாக செயலாளருக்கு தாங்கள் அனுப்பத்தவறின் கூட்டணிக் கட்டுப்பாட்டை மீறியதாகக் கருதப்பட்டு தாங்கள் ஒழுங்கு நடவடிக்கைக்கு ஆளாவீர்கள் என்பதை மத்திய செயற்குழுவின் பணிப்பின்படி அறியத்தருகிறேன் - அன்டன் கா. பொ. இரத்தினம், அமைப்பு நிருவாகச் செயலாளர் தமிழர் விடுதலைக் கூட்டணி

ஏனைய சில பாராளுமன்ற உறுப்பினர்கள் பேசிய கட்சிக் கொள்கைக்கு மாறான கருத்துக்களோடும் கட்சியின் அடிப்படை இலட்சியங்களையே தகர்த்தெறியும்வண்ணம் விடுத்த பத்திரிகை அறிக்கைகளோடும் ஒப்பிடுகையில் என்மீது சுமத்தப்பட்ட மேற்படி குற்றச்சாட்டுகள் எந்தவகையிலும் பாரதூரமானவை என்று யாரும் எண்ணமாட்டார்கள். இவைதவிர வேறு எந்தவித குற்றச்சாட்டும் சாட்டப்பட்டதாக எனக்குத் தெரியாது.

### எனக்கெதிரான சதிகள்

மட்டக்களப்பில் கடந்த பொதுத்தேர்தலில் எனக்கெதிராக திரு. காசி ஆனந்தனை நிறுத்தியது முதலாவது சதித்திட்டம் என்பது நாடறிந்ததே இதன் பின்னர் இரண்டாவது சதித்திட்டம் தயாரிக்கப்பட்டது.

புதிய அரசியலமைப்பு சட்டத்தின்படி ஒரு அரசியல் கட்சி தனக்கு வேண்டாத ஒரு பாராளுமன்ற உறுப்பினரைப் பதவி நீக்கஞ்செய்துவிட்டு, அந்த

(4-ம் பக்கம் பார்க்க)

## தவக்கால நற்சிந்தனை

"நானே உலகிற்கு ஒளியாயிருக்கிறேன், என்னைப் பின்பற்றுகிறவன் இருளிலே நடவாமல் ஜீவஒளியை அடைந்திருப்பான்"

யோவான்: [8 : 12]

கிறிஸ்து பிறப்பதற்கு எழுநூறு ஆண்டுகளுக்கு முன்னே ஏசாயா சொன்ன தீர்க்கதரிசனத்தின் பொன்மொழிகள் கிறிஸ்தவின் மூலமாகவே சொல்லப்படுகிறது.

காட்டுப்பாதையைக் கடக்க எண்ணுகிறவன் தீப்பந்தத்தின் உதவியை நாடுகிறான். இல்லை என்றால் அவன் காட்டைக் கடந்து நாட்டை அடையமுடியாது. சுரங்கத்தில் நுழைந்து தங்கத்தை வெட்டி எடுப்பவன் விளக்கின் ஒளியைத் தேடுகிறான் இல்லையெனில் அவன் பாதாளச் சுரங்கத்தைத் துருவிப்பார்த்துத் தங்கத்தைத் தேடி எடுத்து வர இயலாது. ஆனால் நம் இதய இருளைப் போக்கிக்கொள்ள என்ன வழியைக் கண்டுபிடித்திருக்கிறோம்?

—ஞானஒளி

தொகுப்பு: வில்பிறெட்

# சீன-வியட்நாம் பேச்சுக்கள் மார்ச் 28-ல் ஆரம்பமாகும்?

## நல்லுறவுக்கு சீன விருப்பம்

பீக்கிங், மார்ச், 20
வியட்நாம்- சீன நட்புறவுப் பேச்சுவார்த்தைகள் இம்மாதம் 28ம் திகதி ஆரம்பமாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இரு நாடுகளுக்குமிடையே நல்லுறவு மிளிரவேண்டும் என்று சீன விருப்பம் தெரிவித்துள்ளது.

இப் பேச்சு வார்த்தைகள் முதலில் ஹனோயிலும் பின்னர் பீக்கிங்கிலும் நடைபெற வேண்டும் என்றும் வெளிவிவகார அமைச்சர்கள் ரீதியில் இப் பேச்சுவார்த்தைகள் இடம் பெறவேண்டும் என்றும் சீன தெரிவித்துள்ளது.

சீன-வியட்நாம் பேச்சுவார்த்தைகள் இம்மாதம் 23ம் திகதி வெள்ளிக்கிழமை நடைபெற வேண்டும் என்று கடந்த ஞாயிறன்று சீன தெரிவித்திருந்தது. [இ]

## மூளாயில் கலந்துரையாடல்

[யாழ்ப்பாணம்]

மூளாய் கூட்டுறவு வைத்தியசாலை முன்னேற்றம் பற்றிய கலந்துரையால் ஒன்று இம்மாதம் 24ம் திகதி சனிக்கிழமை பிற்பகல் வைத்தியசாலை முன்றலில் நடைபெறும்.

இக்கலந்துரையாடலின் போது அண்மையில் நியமனம் பெற்ற வைத்தியகலாநிதிகளுக்கு வரவேற்புடன் தேநீர் விருந்துபசாரமும் அளிக்கப்படும். (கு-இ)

## வெளிச்சவீடு இயங்கவில்லை

(நெல்லியடி)

பருத்தித்துறைக் கடற்கரையில் அமைந்துள்ள வெளிச்சவீட்டை இயங்கவைப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு துறைமுகக் கமிஷனரை பருத்தித்துறை பாராளுமன்ற உறுப்பினர் திரு கே துரைரத்தினம் கோரியுள்ளார்.

பருத்தித்துறை வெளிச்சவீடு இயங்காததால் மீனவர்கள் எதிர்நோக்கும் அபாயங்களையும் அதன் விளைவுகளையும் திரு துரைரத்தினம் சுட்டிக்காட்டியுள்ளார்.

இவ் வெளிச்சவீடு கடந்த இருவாரங்களுக்கு மேலாக இயங்கவில்லையென மீனவர் முறையிட்டுள்ளனர். (இ)

## எகிப்துக்கும் இஸ்ரேலுக்கும்

# ஆயுதம் வழங்கும் பிரதான நாடாக அமெரிக்கா இருக்கும்

வாஷிங்டன், மார்ச் 20
எகிப்திய-இஸ்ரேலிய உடன்படிக்கை கைச்சாத்தானபின் இரு நாடுகளுக்கும் ஆயுதங்களை வழங்கும் பிரதான நாடாக அமெரிக்கா விளங்கும் என்று அமெரிக்க பாதுகாப்பு அமைச்சர் திரு. ஹரல்ட் பிரௌன் தெரிவித்தார்.

இருநாடுகளுக்கும் 300க்கு அதிகமான போர்விமானங்களையும் யுத்தக்கப்பல்களையும் அமெரிக்கா வழங்கும் என்றும் திரு பிரௌண் தெரிவித்தார்.

இஸ்ரேலிய பாதுகாப்பு அமைச்சர் திரு. வைஸ்மனையும் எகிப்திய பாதுகாப்பு அமைச்சர் ஜனுப்கமல் ஹசன் அலியையும் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்திய பின்னரே திரு. பிரௌன் மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ)

## முன்மாதிரி

[நெல்லியடி]

புலோலி, அல்வாய் ஆகிய பகுதிகளில் மின் விநியோகத்திற்கான ஏற்பாடுகளை மின்சாரசபை ஊழியர்கள் மேற்கொண்டு வருகின்றார்கள். இவ்வூழியர்களுக்குப் பொது மக்களும் குறிப்பாக இளைஞர்கள் பெரும் உதவிகளைச் சிரமதான அடிப்படையில் செய்து வருகின்றனர். மின்கம்பங்களை நிறுத்துவதிலும் வீதியோரங்களிலுள்ள மரங்களை வெட்டி வீழ்த்துவதிலும் இளைஞர்கள் ஈடுபட்டுள்ளார்கள்.

மிகவிரைவில் மின்விநியோகம் அளிக்கப்படவுள்ள இப்பகுதிகளில் மின்சார விநியோகத்திற்காக பன்முகப்படுத்தப்பட்ட நிதியிலிருந்து சுமார் 1 லட்சத்து 50 ஆயிரம் ரூபாவினை பருத்தித்துறை பாராளுமன்ற உறுப்பினர் திரு.கே. துரைரத்தினம் ஒதுக்கீடு செய்திருந்தார். [அ]

## விரைவில் நெல்லியடி-பரு. பஸ்சேவை

[நெல்லியடி]

நெல்லியடி மத்திய பஸ் தரிப்பு நிலையத்தில் பிரயாணிகளுக்கு ஏற்படும் கஷ்டங்களை பருத்தித்துறை இ. போ. ச டிப்போ முகாமையாளர் திரு இ பரநிருபசிங்கம் நேரில் கண்டறிந்தார்.

பாடசாலை மாணவர்களுக்கும் காரியாலய அலுவலர்களுக்கும் பஸ் பிரயாணத்தில் ஏற்படும் கஷ்டங்களை நேரிடையாக கண்ட டிப்போ முகாமையாளர், நெல்லியடியிலிருந்து பருத்தித்துறை குறுகிய தூரபஸ் சேவையை நடாத்த உறுதியளித்ததுடன் இக் குறுகிய சேவை மிகவிரைவில் ஆரம்பிக்கப் படவுள்ளதாகவும் தெரிவித்தார். [கு]

## மந்திரிசபை அங்கீகாரம்

ஜெருஸலம், மார்ச் 20
எகிப்து- இஸ்ரேல் உடன்பாட்டுயோசனையை இஸ்ரேலிய அமைச்சரவை நேற்று அங்கீகரித்தது.

## சுவீப் முடிவுகள்

(புத்தளம்)
புத்தளம் 'தம்மன்ன' சிமெந்துத் தொழிற்சாலையில் அதிர்ஷ்டம் பார்க்கப்பட்ட 710வது தேசிய சுவீப் முடிவுகள் வருமாறு:

முதலாம் பரிசு
03 R 0145
ரூபா 1,00,000

இரண்டாம் பரிசு
28 D 0010
ரூபா 40,000

மூன்றும் பரிசு
24 K 0192
ரூபா 10,000

தலா 1,504 ரூபா 17 சதம் கொண்ட 100 ஆறுதல் பரிசு பெறும் டிக்கட்டுகள் விபரம் வருமாறு:

| | |
|---|---|
| 15 A 0029 | 29 A 0287 |
| 30 A 0084 | 06 B 0605 |
| 16 B 0094 | 18 B 0819 |
| 27 B 0769 | 32 B 0126 |
| 06 C 0970 | 01 D 0197 |
| 08 D 0525 | 22 D 0081 |
| 22 D 0304 | 26 D 0478 |
| 03 E 0726 | 11 E 0104 |
| 32 E 0496 | 30 F 0945 |
| 23 G 0859 | 24 G 0753 |
| 11 H 0669 | 11 H 0904 |
| 20 H 0483 | 31 H 0599 |
| 32 H 0695 | 06 J 0974 |
| 16 J 0648 | 02 K 0259 |
| 07 K 0185 | 09 K 0787 |
| 22 K 0878 | 05 L 0613 |
| 05 L 0613 | 05 L 0986 |
| 11 L 0352 | 15 L 0813 |
| 16 L 0344 | 16 L 0873 |
| 17 L 0205 | 26 L 0864 |
| 24 M 0679 | 30 M 0159 |
| 02 N 0673 | 05 N 0323 |
| 11 N 0397 | 17 N 0741 |
| 19 N 0038 | 23 N 0487 |
| 04 O 0848 | 26 O 0503 |
| 29 O 0586 | 31 O 0416 |
| 04 P 0398 | 08 P 0192 |
| 18 P 0788 | 21 P 0126 |
| 26 P 0110 | 30 P 0869 |
| 02 Q 0484 | 13 Q 0906 |
| 14 Q 0502 | 18 Q 0981 |
| 19 Q 0389 | 24 Q 0214 |
| 27 Q 0892 | 08 R 0734 |
| 16 R 0827 | 26 R 0173 |
| 31 R 0736 | 07 S 0338 |
| 11 S 0603 | 11 S 0740 |
| 12 S 0430 | 12 S 0922 |
| 22 S 0610 | 25 S 0660 |
| 26 S 0796 | 21 T 0858 |
| 28 T 0094 | 09 U 0916 |
| 10 U 0191 | 01 V 0941 |
| 07 V 0993 | 08 V 0306 |
| 13 V 0225 | 25 V 0268 |
| 26 V 0308 | 03 W 0664 |
| 11 W 0066 | 16 W 0829 |
| 06 X 0951 | 10 X 0639 |
| 17 X 0574 | 24 X 0828 |
| 12 Y 0441 | 25 Y 0446 |
| 30 Y 0674 | 32 Y 0820 |
| 18 Z 0874 | 18 Z 0895 |
| 20 Z 0302 | |

## குற்றச்...

(3ம் பக்கத் தொடர்ச்சி)

இடத்தில் தமக்கு வேண்டிய ஒருவரை நியமிக்கலாம் என்றிருந்தது.

இதன்படி என்னிடம் விளக்கம் கேட்பதுபோல் கேட்டுவிட்டு என்னைக் கட்சியிலிருந்து விலக்க நாடகமாடியது. என்னோடு போட்டியிட்டு மக்களால் ஒதுக்கப்பட்ட திரு. காசி. ஆனந்தனை என்னிடத்துக்கு நியமிக்கலாம் என்பதே இரண்டாவது சதி.

அரசாங்கம் அரசியலமைப்புச் சட்டத்தை மாற்றியதும் கூட்டணியில் எனக்கெதிரான கோஷ்டி, என்னைக் கட்சியால் விலக்கிப் பதவியிழக்கச்செய்ய முடியாதென்பதால் இன்னும் குற்றச்சாட்டுகளை ஜோடித்து என்னுடைய அரசியல் ஆளுமைக்கு மாசு கற்பிக்கலாமா என்று மூன்றாவது சதித்திட்டம் வகுத்திருக்கவேண்டும்.

நான் அறிந்த வரையில் என் மீது சுமத்தப்பட்டிருக்கும் ஒன்பது குற்றச்சாட்டுகளும்தான். இனி என்ன 'பாரதூரமான' குற்றச்சாட்டுகளைச் சுமத்த நண்பர் அமிர்தலிங்கம் அடிபோடுகின்றாரோ? அந்த இரகசியத்தை ஆண்டவனும், தந்தை செல்வாவுந்தான் அறிவார்கள் என்று திரு. இராசதுரை கூறினார்.

### செல்வாவின் பண்பு

தலைவர் என்றிருப்பவர், கட்சியிலுள்ளவர்களைக் கட்டிக்காத்து அரவணைத்துப் போகக் கூடியவராக இருக்கவேண்டும். இந்த அரிய பண்பு தலைவர் செல்வாவுக்கு இருந்ததாலேயே தமிழர் இயக்கம் பெருவளர்ச்சி அடைந்தது. பொறுமை காரணமாகக் கட்சிக்குள்ளேயே ஏட்டிக்குப் போட்டிகளையும், குத்துவெட்டுக்களையும், குழிதோண்டல்களையும், கழுத்தறுப்புக்களையும் தூண்டிவிடுவதன் மூலம் பழிவாங்க முற்படும் தலைவர்களால் கட்சியை ஒருபோதும் வளர்க்கமுடியாது'' என்றும் திரு. இராசதுரை கூறினார். [கு]

## விண்வெளியில் உலவியபடியே

# மற்றொரு கலத்திலிருந்து உணவு பெற்றனர்

மாஸ்கோ, மார்ச்20
சோவியத் விண்கலமான சல்யூட்—6ல் கடந்த சில நாட்களாக விண்வெளியில் ஆய்வு நடத்தும் வீரர்களான யக்கோவ், ருமின் ஆகிய இருவரும் நேற்றுபூமியிலிருந்து விண்வெளிக்கு அனுப்பப்பட்ட மற்றொரு கலத்திலிருந்து தங்களுக்குத் தேவையான எரிபொருள், உணவு ஆகியவற்றை விண்வெளியிலிருந்து கொண்டே பெற்றுக் கொண்டனர்.

## ஹிமாலயாவில் கடும்பனி

# யுத்தகால அடிப்படையில் மீட்பு வேலைகள்

புதுடில்லி, மார்ச் 20
ஹிமாலயப் பிரதேசத்தில் ஏற்பட்டுள்ள பெரும் பனி வீழ்ச்சியினால் பாதிக்கப்பட்ட இடங்களில் போர்க்கால அடிப்படையில் மீட்பு வேலைகள் மேற்கொள்ளப்படுகின்றன என்று ஹிமாலயப் பிரதேச முதல்வர் திரு. சாந்தகுமார் தெரிவித்தார்.

பின் பள்ளத்தாக்குப் பகுதியில் குடியிருக்கும் 2 ஆயிரம் பேர் பற்றிய விபரங்கள் எதுவும் இதுவரை தெரியவில்லை கடும்பனி வீழ்ச்சி இதன் காரணமான பல பகுதிகளுக்குமான தொடர்புகள் முற்றாகத் துண்டிக்கப்பட்டுள்ளன.

மாடிவீடுகள் பலவற்றைக் கூட உறைபனி மூடிமறைத்து விட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது. (இ)

## தாக்குதலில் பலி

[யாழ்ப்பாணம்]

ஒரே இடத்தில் வேலை செய்யும் இருவருக்கிடையில் ஏற்பட்டதகராறைத் தொடர்ந்து நடந்த தாக்குதலுக்கு ஒருவர் பலியானார்.

மாசியப்பிட்டியில் ஒரே இடத்தில் சந்தேகநபர் சந்தசாமி என்பவரும் இறந்தவரான மகாதேவனும் வேலை செய்தாரென்றும் சந்தேக நபர் கல்லாலும், பொல்லாலும் தாக்கியதைத் தொடர்ந்து மகாதேவன் மரணமானார் என்று விசாரணையில் தெரியவந்துள்ளது.

சந்தேகநபர் அங்கிருந்து சில சாமான்களை எடுத்துச் சென்றதாகவும் இதனை இறந்தவர் சொல்லிக் கொடுத்ததாகவும் இதனாலேயே தாக்குதல் நடைபெற்றதாகவும் கூறப்படுகிறது. [கை]

## அரபு மண்ணிலிருந்து

# இஸ்ரேல்படைகள் இம்மாத இறுதியில் வெளியேறும்

ஜெரூஸலம், மார்ச் 20
இஸ்ரேலியர் வசமிருந்த சைனாய் பகுதியிலிருந்து இம்மாதம் 26ம் திகதியளவில் இஸ்ரேலியத்துருப்புக்க வெளியேற ஆரம்பிக்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இஸ்ரேலிய- எகிப்து உத்தேச உடன்படிக்கை கைச்சாத்தானதும் இஸ்ரேலிய படைகள் விலக ஆரம்பிக்கும் என்றும் படைகள் விலகிச் செல்ல 9 மாதங்கள் எடுக்கும் என்றும் இஸ்ரேலிய செய்திகள் தெரிவிக்கின்றன.

படைவிலகலை எகிப்து- இஸ்ரேல் கூட்டுக்கமிஷன் மேற்பார்வை செய்யும் என்றும் தெரிவிக்கப்பட்டது. [இ]

# பேச்சுவார்த்தைகள் மூலம் பிரச்னை தீராவிடின் நேரடி நடவடிக்கை

[யாழ்ப்பாணம்]
கள்ளிறக்கும் தொழிலாளர்களுடைய கூட்டுறவு சங்கமாக தெங்கு பனம் பொருள் உற்பத்தி விற்பனவு கூட்டுறவுச் சங்கம் ஆரம்பிக்கப்பட்டபொழுதிலும் இன்று வரைக்கும் இக்கூட்டுறவு இயக்கம்கூட்டுறவுப்பரிசோதகர்களினதும் நியமனம் பெற்ற இயக்குனர்களின் ஆதிக்கத்திலும் தான் நடைபெற்று வருகின்றது. இவர்களிடையே ஊழல்கள் மலிந்துள்ளது. இதற்கு எதிராக அரசாங்கம் எதுவித நடவடிக்கையும் எடுப்பதில்லை. கள்ளிறக்கும் தொழிலாளர்களிடம் குற்றங்களும் தெண்டங்களும் அறவிடப்படுகின்றன. இதனால் இத்தொழிலாளர்கள் வாழ்க்கை நடத்துவதற்கே மிகவும் கஷ்டப்படுகின்றார்கள்.

இவ்வாறு வட இலங்கை கள் இறக்கும் தொழிலாளர் சங்கப் பொதுச்செயலாளர் திரு. பொன். குமாரசாமி புலோலியில் நடைபெற்ற கூட்டத்தில் பேசுகையில் கூறினார்.

திரு. எல். சிற்றம்பலம் கூட்டத்திற்கு தலைமை வகித்தார்.

திரு. குமாரசாமி மேலும் கூறியதாவது!

இந்த கூட்டுறவுச் சங்கம் உதயமானபோது பல வாக்குறுதிகள் கொடுக்கப்பட்டன. இவை அனைத்தும் காற்றில் பறக்கவிடப்பட்டு விட்டன. தொழிலாளர்கள் பாரதூரமாகப் பாதிக்கப்பட்டுள்ளதால் தொழிலாளர்களின் பிரச்னைகளைத் தீர்க்க பத்து கோரிக்கைகள் விடுக்கப்பட்டுள்ளன. இவற்றை வட பகுதி அரசாங்க அதிபர் கூட்டுறவு இலாகா அதிகாரிகளிடம் சமர்ப்பித்து பேச்சுவார்த்தை நடத்துவதென்வும் தீர்மானுத்துள்ளோம். பேச்சுவார்த்தைகள் மூலம் பிரச்னைகள் தீர்க்கப்படாவிட்டால் நேரடி நடவடிக்கைகளில் இறங்க நேரிடும்.

பாளை வெட்டுவதற்கு அனுமதி வழங்கக்கூடாது. கள் இறக்குவதற்கு தொழிலாளியின் சக்திக்கு ஏற்ப போதிய பனை-தென்னை மரங்கள் கொடுக்கப்படவேண்டும். தொழிலாளர் உற்பத்தி செய்யும் கள் அனைத்தையும் சங்கம் கொள்வனவு செய்யவேண்டும். அதே நேரத்தில் சங்கம் ஊற்றும் கள்ளுக்குரிய பணத்தை தொழிலாளியிடமிருந்து அறவிடக்கூடாது. விரையமாகும் கள்ளை சாராய வடிசாலை அமைத்து அதன் மூலம் சாராய உற்பத்தி மேற்கொள்ள வேண்டும். ஒரு தொழிலாளி சங்கத்திற்கு கள் அல்லது பதநீர் கொடுத்துக் கொண்டிருக்கும்போது திடீரென சுகவீனமுற்று தொழில் செய்ய முடியாது இருப்பின் அவரது நிலை பரிசிலனை செய்யப்பட்டு அவர் மீண்டும் தொழில்படும் வரை நிவாரணம் வழங்கப்படவேண்டும். பாரபட்சமில்லாமல் பனை, தென்னை வழங்கப்படவேண்டும். [இ]

## ரட்ணூஸ் வெற்றி

[நெல்லியடி]
வதிரி டயமன்ட் விளையாட்டுக்கழகம் நடாத்திய ஐ. க. நடராஜா ஞாபகார்த்த உள்ளூர் தொழிலகங்களுக்கிடையிலான முதலாவது உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியின் இறுதி ஆட்டத்தில் ரட்ணூஸை எதிர்த்து இவகாமீஸ் மோதியது ரட்ணூஸ் 1—0 கோலால் வெற்றியீட்டியது

பிரதம விருந்தினராக திரு சி. க. ராஜேந்திரன் கலந்து கொண்டு ஞாபகார்த்த கேடயத்தை பரிசளித்தார். இவ்வுதைபந்தாட்டப் போட்டிக்கு திரு. எம். எஸ். கமலநாதன் நடுவராகக் கடமை புரிந்தார். [ஆ]

## இன்றைய பலன்

பங்குனிமாதம் 7-ம் திகதி
(21-3-1979)
புதன்கிழமை

மேடம்: தேன்சிந்தும் நிகழ்ச்சிகள் நடைபெறும். நண்பர்கள் உற்சாகமாக உங்களை வரவேற்பார்கள். உங்கள் சீரிய நோக்கம் சிறப்பைத் தேடித்தரும்.

இடபம்: திகைக்கவைக்கும் திருப்பங்கள் ஏற்படும். அமைதிக்குப் பங்கம் ஏற்படும். சிறிய விஷயத்திற்கும் இடமுண்டு. நிதானம் வேண்டும்.

மிதுனம்: காதலர்கள் மகிழ்ச்சியடைவர். நன்மையான மாற்றங்களுக்கும் இடமுண்டு, வீட்டில் நல்ல சூழ்நிலை தென்படும்.

கடகம்: எதிலும் நன்றாக சிந்தித்த பின்பே செயலாற்றவும். வியாபாரிகள் அதிக நஷ்டத்தைப் பெறுவர். கடன் தொல்லைகள் அதிகரிக்கும்.

சிங்கம்: பொதுத்துறையில் அதிக மனநாட்டம் செலுத்துவீர்கள். பரோபகாரச்சிந்தை மேலிடும். சுற்றுடலில் நிலைமை சீரடையும்

கன்னி: புதிய முற்சிகளில் அதிக உற்சாகம் பிறக்கும். சிலருக்கு வெளிநாடு செல்லும் வாய்ப்புமுண்டு. பணவரவும் உண்டு.

துலாம்: பொருள் வரவுக்கு தாராளமாக இடமுண்டு. வணிகர்களுக்கு வியாபார விருத்தியுண்டு. புத்திரர் புகழுமுண்டு.

விருச்சிகம்: ஏமாற்றம் தாக்கும். சிறு தவறுதல் பெரிய நெருக்கடியை உருவாக்கும். எதிலும் முன்னெச்சரிக்கையுடன் நடக்கவும்.

தனுசு: கழுகுப் பார்வை வட்டமிடும், வேண்டாதவர்களின் குறுக்குவழித் தலையீடு வேதனையைத் தரும். நலிவுக்கு இடமுண்டு. நாவடக்கம் நன்று.

மகரம்: கைநிறையப் பணம் காதல்செய்யத் துணை, வாழ்க்கையே கலகலப்பாக இருக்கும். சுவையான தினம்.

கும்பம்: அதிக ஆசை ஆபத்தைத் தேடித்தரும். அன்னிய வாசமும் ஏற்படும். சகோதரவழிச் சஞ்சலமும் உண்டு, பொறுமைவேண்டும்.

மீனம்: அறிவுத்தாகம் மேலிடும், மாதுருவழிச் சுகத்திற்கும் இடமுண்டு. டாக்டர்கள் வாழ்க்கை பிரகாசமாகவிருக்கும்.

[சோதிடக்கலாநிதி
திருமலை க. வேலுப்பிள்ளை

## அருணோதயா இல்லப் போட்டி

(பண்டத்தரிப்பு)
அளவெட்டி அருணோதயாக் கல்லூரி வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டி இம்மாதம் 24 ம் திகதி சனிக்கிழமை பிற்பகல் கல்லூரி அதிபர் திரு. வி. சிவசுப்பிரமணியம் தலைமையில் நடைபெறவுள்ளது. பிரதம அதிதியாக மல்லாகம் மாவட்ட நீதிபதி திரு. எஸ். ஆனந்த குமாரசாமி கலந்துகொள்வார். வைத்திய கலாநிதி திருமதி ஆனந்தகுமாரசாமி பரிசில்களை வழங்குவார்.

## "கம்பூச்சியாவிலிருந்து வியட்நாம் படைகள் விலகாதது ஏன்?"

[பண்டத்தரிப்பு]
"வியட்னாமிலிருந்து சீனா தனது படைகளைத் திருப்பி அழைத்துள்ளது ஆனால் கம்பூச்சியாவிலிருந்து வியட் நாம் தனது ஒன்றரை லட்சம் படைகளையும் திருப்பி அழைக்காமல் இருப்பது ஏன்? இதை அனைவரும் சிந்தித்துப் பார்க்க வேண்டும்" என்று இலங்கைக் கம்யூனிஸ்ட்கட்சியின் (இடது) வடபிரதேசச் செயலாளர் திரு. கே. செந்திவேல் பண்டத்தரிப்பிலுள்ள காலையடி என்ற இடத்தில் நடைபெற்ற கருத்தரங்கில் பேசுகையில் குறிப்பிட்டார். சட்டத்தரணி எஸ். தேவராஜா தலைமையில் நடைபெற்ற இக்கருத்தரங்கில் திரு செந்திவேல் தொடர்ந்துபேசுகையில் குறிப்பிட்டதாவது!

"வியட் நாம் படைகள் தமது எல்லையை மீறி சீனப் பிரதேசத்திற்குள் ஊடுருவல் நடத்தியதாலேயே சீனா அதற்குப் பதிலடி கொடுக்குமுகமாக எதிர்த்தாக்குதல் நடாத்தியது. வியட்நாம் படைகளை அவர்களின் நாட்டுக்குள் விரட்டி அடித்த சீனப்படைகள் தமது பழைய எல்லைக்குள் திரும்பிவிட்டனர். உண்மை நிலை இவ்வாறு இருக்க சீன ஆக்கிரமிப்பு என்ற பிரசாரம் அர்த்தமற்றதாகும்.

இன்று சோவியத் யூனியன் உலகைத் தனது ஆதிக்கத்திற்குள் கொண்டுவரும் முயற்சியில் கியூபாவையும், வியட்நாமையும் கூட்டாளிகளாகக் கொண்டுள்ளது. இன்று ஐரோப்பிய ஆசிய நாடுகளில் மொத்தம் 7 லட்சம் சோவியத் படைகள் நிறுத்தப்பட்டுள்ளன. ஆபிரிக்க நாடுகளில் 50 ஆயிரம் கியூபாப்படைகள் நிறுத்தப்பட்டுள்ளன. கம்பூச்சியாவில் ஒன்றரை லட்சம் வியட்நாம் படைகள் உள்ளன. இதேவேளை உலகின் எந்த ஒரு நாட்டிலாவது சீனப் படைகள் வீணாக நிறுத்திவைக்கப்பட்டுள்ளதா என்பதை நாம் எண்ணிப் பார்க்கவேண்டும், இதிலிருந்து உண்மையான ஆக்கிரமிப்பாளர்கள் யார் என்பதை எல்லோரும் இனம்காணக்கூடியதாக உள்ளது." [அ]

## வெங்காயக் கொள்வனவில் விலை வேறுபாடு

[பண்டத்தரிப்பு]
பண்டத்தரிப்புப் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் இப்பகுதியிலுள்ள விவசாயிகளிடமிருந்து பிடியாகக் கட்டப்பட்ட வெங்காயத்தை 85 ரூபாவுக்குக் கொள்முதல் செய்துவருகின்றது.

இதேவேளை பண்டத்தரிப்புப் பலநோக்குக் கூட்டுறவுச் சங்க மாதகல் கிளைக் கட்டிடத்திலுள்ள அரசாங்க விற்பனைத் திணைக்களத்தின் வெங்காய சேமிப்புக் களஞ்சியத்தில் பிடி வெங்காயத்தை அந்தர் 75 ரூபாவுக்கு விற்பனைத் திணைக்களம் கொள்வனவு செய்துவருகிறது. பண்டத்தரிப்புப் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் வெங்காயத்தை அந்தர் 85 ரூபாவுக்குக் கொள்வனவு செய்யும்போது விற்பனைத் திணைக்களத்தினர் 75 ரூபாவுக்கு கொள்வனவு செய்துவருவது குறித்து இப்பகுதி விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர். (அ)


நாகம்ஸ்
[சுன்னாகம்]
தினசரி 6-30, 9-45
சனி, ஞாயிறு 2-30
சிவாஜி-சரோஜாதேவி
கல்யாணியின் கணவன்

Rio (Jaffna)
Phone: 7607
Daily 4 Shows
KARATE CALLAN

12-வது வாரம்
வின்ஸர்
[யாழ்ப்பாணம்]
போன்: 466
தினசரி 5 காட்சிகள்
10-00, 1-00, 3-45, 6-45, 9-45
பைலட் பிரேம்நாத்
(ஈஸ்ட்மன் கலர்)

இன்று மட்டும்
தினசரி 4 காட்சிகள்
ராணி
[யாழ் நகர்]
முத்துராமன்-பிரமிளா
ஜெய்சித்ரா-ராகவன்
வாழையடி வாழை

REGAL (Jaffna)
2nd CROWDED WEEK
Daily 4 Shows
2-00, 4-30,
7-00 & 9-30 p.m. only
JEAN PAUL - BELMONDO In
THE HUNTER (color)
(Spy film)
த ஹன்ரர்

வெலிங்டன்
[யாழ்ப்பாணம்]
தினசரி: 2-30, 6-30&9-45
சனி, ஞாயிறு: 10-30, 2-30
6-30 & 9-45
எஸ். எஸ். ஆர். - விஜயகுமாரி
குமுதம்
(புதிய பிரதி)

லிடோ
[யாழ். நகர்]
போன்: 7638
தினசரி 4 காட்சிகள்
விஜயகுமார் - ஸ்ரீவித்யா - தங்கவேலு
ஆசை அறுபதுநாள்

Shanthi
(Jaffna Phone- 7642).
10-30, 2-30, 4-45, 7-00&9-30
A Story of:
CRUELTY, PASSION, HATE,
TRAGEDY & SUSPENSE
"The Gipsy Camp Vanishes into The Blue"
(Scope color)

ஸ்ரீதர்
(யாழ்நகர்) தினசரி 10-30, 2-15, 615&9-45
ரவிச்சந்திரன்-ஜெயலலிதா
பாக்தாத் பேரழகி
(புதிய பிரதி)

மனோகரா
[யாழ்நகர்]
தினசரி 4 காட்சிகள்
ஜெமினி-பத்மினி
மீண்ட சொர்கம்
[புதிய பிரதி]

ராஜா
(யாழ்நகர்)
தினசரி4காட்சிகள் கடைசி2தினங்கள்
சிவாஜி-தேவிகா
நடித்த
அன்னை இல்லம்
[புதிய பிரதி]
23-3-79 முதல் சிவாஜி-விஜயா எதிரொலி

வெஸ்லி
(மானிப்பாய்)
தினசரி 6-30, 9-45
சனி, ஞாயிறு 2-30
ஜெமினி - ஈ. வி. சரோஜா
பாக்கியலக்ஷ்மி

# ‘இலக்கியப்போர் மீண்டும் ஆரம்பிக்கப்படவேண்டும்!’

## இளம் தலைமுறையினருக்கு எழுத்தாளர் டானியல் அழைப்பு

[யாழ்ப்பாணம்]

“வர்க்க சமரச இலக்கியக்காரர்களாலும், மேல்மட்ட கற்பனாவாத எழுத்தாளர்-கலைஞர்களாலும் கலை இலக்கியம் இன்று பின்னோக்கித் தள்ளப்படுகிறது. இந்த நிலையில் இருபது ஆண்டு காலத்திற்கு முன் தொடங்கப்பட்ட நிர்த்தாட்சண்யமான இலக்கியப் போர், இன்றைய இளம் தலைமுறையினரால் மறுபடியும் தொடங்கப்பட வேண்டும். இந்தநாட்டில் மக்களுக்கான கலை இலக்கியம் படைக்கப்பட்டபோது அவற்றை ‘இழிசனர் இலக்கியம்’ என்று கேலிசெய்தவர்கள், இந்த இலக்கியமுறை மக்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டதனால் தாங்களாகவே காலகதியில் ஒதுங்கிக்கொண்டார்கள். இப்போதைய சூழ்நிலையைத் தங்களுக்குப் பயன்படுத்திக்கொண்டு அவர்கள் மீண்டும் உயர்ந்த மேடைகளில் உரக்கப்பேசத் தொடங்கிவிட்டார்கள். இதற்குக் காரணங்களை கண்டறிந்து இந்த பேராபத்தைத் தடுத்துநிறுத்த இளம் கலை இலக்கியக்காரர்கள் திரண்டிடவேண்டும்”.

இவ்வாறு எழுத்தாளர் கே. டானியல் யாழ். ஆனைப்பந்தி உயர்கலைக் கல்லூரியில் கடந்த ஞாயிறு மாலை நடைபெற்ற மக்கள் கலைஇலக்கியப் பெருமன்ற விஸ்தரிப்புக் கூட்டத்திற்குத் தலைமைவகித்துப் பேசுகையில் குறிப்பிட்டார்.

நாட்டின் பல பகுதிகளிலிருந்தும் பெருந்தொகையான கலை இலக்கியக்காரர்கள் கலந்து கொண்ட இக்கூட்டத்தில் திரு. டானியல் மேலும் பேசுகையில்குறிப்பிட்டதாவது

‘மிக மட்டரகமான இலக்கிய வகையறுக்களை இந்தியாவிலிருந்து இறக்கி அவைகளுக்குப் புகழ்பாடும் இலக்கிய விமர்சனங்களும், இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்படும் நடிகர்களுக்கு முன்னால் நடித்துக் காட்டி நற்சாட்சிப் பத்திரம் பெறுபவர்களும் இந்த நாட்டின் மானத்தை விற்பவர்கள் மட்டுமல்ல, இந்த நாட்டின் கலை இலக்கியத்துறைக்கே துரோகமிழைப்பவர்களுமாவார்கள். அத்துடன் எல்லாமறிந்த இலக்கிய மேதைகள் என்ற ‘லேபலு’டன் இந்தியா சென்று, அங்கும் இவர்களைப் போன்ற இலக்கிய ஜாம்பவான்களைச் சந்தித்து உரையாடிவிட்டு இங்குவந்து ‘நான் முந்தி-நீ முந்தி’ என்று இலக்கிய யாத்திரைக் கட்டுரை எழுதுபவர்கள் இந்த நாட்டின் தேசிய பாரம்பரிய இலக்கிய கோட்பாட்டுக்கு நாசம் விளைவிப்பவர்களாவார்கள். இவர்களை இனங்கண்டு மக்கள் கலை இலக்கியம் படைக்கும் இளம் சந்ததியினர் சரியான பாதையில் முன்னேற வேண்டும்.

இக் கூட்டத்தில் திருவாளர்கள் என். கே. ரகுநாதன், வி. ரி. இளங்கோவன், நந்தினி சேவியர், நல்லை அமிழ்தன், பொன் பொன்ராசா, மு. செல்லைத்தம்பி, எஸ். பி. ஜீவானந்தம், எஸ். இராசா ஆகியோரும் பேசினர்.

# ‘சவூதி’க்கு சாரதியாகச் சென்றவர் விபத்தில் பலி!

(யாழ்ப்பாணம்)

சவுதி அரேபியாவிற்கு சாரதியாகச் சென்ற 6 பிள்ளைகளின் தந்தை அங்கு ஏற்பட்ட விபத்தொன்றில் பலியானார்.

வண்ணார் பண்ணையைச் சேர்ந்த சுந்தரம் கனகலிங்கம் [36வயது] என்பவர் கடந்த 3 மாதத்தின்முன்னர் சவுதி அரேபியா சென்றார்.

அங்கு 3 மாதகால சாரதியாக கடமையாற்றிவந்த போது ஏற்பட்ட விபத்தில் மரணமானார்.

அன்னாரின் சடலத்தை யாழ்ப்பாணத்திற்கு கொண்டு வருவதற்கான முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளன. [ச]

# சத்திரசிகிச்சைக்கு அஞ்சி கர்ப்பிணி தற்கொலை!

[மாவிட்டபுரம்]

குழந்தையொன்றைப் பிரசவிக்க சொற்ப நாட்களே இருக்கையில், சத்திர சிகிச்சை மூலமே குழந்தை பிறக்க முடியும் என்று தெரிவிக்கப்பட்டதால் பயத்திற்குள்ளான இளம் பெண் ஒருவர் நஞ்சருந்தி தமது உயிரைப் போக்கிக் கொண்டார்!

விளானைச் சேர்ந்த சசிகலா யோகநாதன்என்னும் 21வயது இளம்பெண்ணே இவ்வாறு மரணமானவராவர்.

கடந்த ஒரு வருடத்திற்கு முன்னர் திருமணம் செய்திருந்த காலமானவர், தற்போது ஒரு குழந்தைக்கு தாயாகமாற இருந்தாரெனவும், இயற்கையாக குழந்தை பிறக்க முடியாதநிலையிலிருந்தமையால் சத்திரசிகிச்சை மூலமே குழந்தையைபிரசவிக்க வேண்டுமென வைத்தியர்கள் கூறியதால் மிகவும் பயந்து எப்போதும் யோசனையுடன் இருந்தாரெனவும், சம்பவ தினம் திடீரென மயக்கமுறவே வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டதும் அங்கு மரணத்தை தழுவிக்கொண்டதாகவும் விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

பிரேத பரிசோதனைசெய்த தெல்லிப்பழை மாவட்ட வைத்திய அதிகாரி செல்வி கனகரத்தினம் வயிற்றில் நஞ்சு காணப்பட்டதாக தெரிவித்தார்.

திடீர்மரணவிசாரணை நடத்திய மரணவிசாரணை அதிகாரி திரு. தா. தம்பிராசா தற்கொலை என தீர்ப்பு வழங்கினார்.

யாழ். ஆஸ்பத்திரி

# சருமநோய் சிகிச்சைப்பிரிவு மூடப்படும் அபாயம்!

## நோயாளிகள் புகார்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரியில்உள்ள சருமநோய்ச் சிகிச்சைப்பிரிவு மூடப்படலாம் என அஞ்சப்படுகிறது.

சருமநோய் சிகிச்சை நிபுணர் இல்லாததை அடுத்தே நோயாளர்கள் மத்தியில் மேற்கண்டவாறு அச்சம் எழுந்துள்ளது.

இப் பிரிவில் முன்னர்கடமையாற்றிய சருமநோய் சிகிச்சை நிபுணர் டாக்டர் நடராஜா கடந்த ஆண்டு இறுதியில் கண்டிக்கு இடமாற்றம்செய்யப்பட்டிருந்த போதிலும் வேறு இரு சாதாரண டாக்டர்கள் இதுவரை இப் பிரிவில நோயாளர்களைக் கவனித்து வந்தனர்.

நேற்று இப் பிரிவில் டாக்டர்கள் எவரும் இல்லாத காரணத்தால் நூற்றுக்கணக்கான நோயாளிகள் அதிகாலையிலிருந்து பகல்வரை காத்திருந்துவிட்டு ஏமாற்றத்துடன் வீடு திரும்பினர்.

வார்ட்டில் அனுமதிக்கப்பட்டிருந்த நோயாளிகளும் ஆஸ்பத்திரியை விட்டு வெளியேறியுள்ளனர்.

நேற்று நீண்டநேரமாகக் காத்திருந்த சருமநோயாளிகள் ஆஸ்பத்திரி வைத்திய அத்தியட்சகர், யாழ் எம் பி ஆகியோரிடம் முறையிட்டுள்ளனர்.

அவதியுற்ற நோயாளிகள சிலர் ‘ஈழநாடு’ அலுவலகத்திற்கு நேரில் வந்தும் புகார் தெரிவித்தனர். (கை-இ)

## ரெண்டரில் 25 வீதம்.....

[1ம் பக்கத் தொடர்ச்சி[

கோரியவர் மிகுதிகளில் தமக்கு விரும்பிய கடையை எடுத்துக் கொள்வார். இதே போல் கூடிய தொகை ரெண்டர் கோரிய முதல் 7 பேரும் கடைகளை எடுத்தபின் மிகுதி 7 கடைகளும் 25 வீதம் குறைந்து பழைய கடைக்காரர்களுக்கு வழங்கப்படும்.

நவீன மார்க்கட் கட்டிய பகுதியில் கடைவைத்திருந்த 12 பேர் தங்களுக்கு கடை வேண்டுமெனக் கோரியிருந்தனர். இவர்களில் இருவர் தற்போது கடைவேண்டாமென தெரிவித்துள்ளனர். ஒருவர் வெளிநாடு சென்றுள்ளாராம், இருவர் முன்பு ‘சலூன்’ வைத்திருந்தவர்கள். சலூன், லோண்றி போடுவதற்கு கடைகள் வழங்கப்பட மாட்டாது என முன்னரே அறிவிக்கப்பட்டிருந்ததால், இவ்விருவர்களுக்கும் கடைகள் வழங்கப்பட மாட்டாது. மற்ற பழைய கடைக்காரர்களுக்கு மட்டுமே கடைகள் வழங்கப்படும்.

‘ரெண்டர்’ வழங்கக் கூடாதென மாநகரசபை ஆணையாளர் சே சிவஞானத்திற்கு தடை விதித்து இடைக்கால தடை உத்தரவு வழங்குமாறு கோரி, பழைய கடைக்காரரான எம். பி சின்னராசா, யாழ் மாவட்ட நீதிமன்றத்தில் மனுவொன்றை தாக்கல் செய்திருந்தார். இம் மனு யாழ். மாவட்ட நீதிமன்றத்தில் நீதிபதி ஜே ஜி, ஆசிர்வாதம் முன்னிலையில் விசாரணை செய்யப்பட்டு வருகிறது’

விசாரணை நடைபெற்றுக் கொண்டிருந்த போதே, ஏற்கனவே அறிவிக்கப்பட்டிருந்தபடி நள்ளிரவு 1 மணி வரை ரெண்டர் விண்ணப்பங்கள் ரெண்டர் குழு முன்னிலையில் உடைக்கப்பட்டு பகிரங்கமாக ரெண்டர் தொகைகள் பெயர் விலாசம் அறிவிக்கப்பட்டு திரும்பவும் ஒட்டிப் பாதுகாப்பாக வைக்கப்பட்டது.

இதே சமயம், கடைக்காரர்கள், எதிர்க்கட்சித் தலைவர் திரு: ஏ அமிர்தலிங்கத்தை சந்தித்து இவ்விவகாரம் பற்றியெடுத்துக் கூறியதைதொடர்ந்து எதிர்க்கட்சித் தலைவர் திரு. ஏ அமிர்தலிங்கம் பிரதமரும் உள்ளூராட்சி அமைச்சருமான திரு. ஆர். பிரேமதாசாவை சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தினார். இதனைத் தொடர்ந்து ரெண்டர் மீது தொடர்ந்து நடவடிக்கை எடுப்பது நிறுத்திவைக்கப்பட்டிருந்தது.

யாழ்ப்பாணம் எம்.பி. திரு. வெ, யோகேஸ்வரன் பிரதமருடன் பேசி சமரசதீர்வுகாண முயற்சியெடுத்துள்ளார் என்று.

கடந்த தவணையின்போது யாழ் மாவட்ட நீதிபதி திரு. ஜே ஜி. ஆசிர்வாதத்தின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டதால் விசாரணை ஒத்திவைக்கப்பட்டது.

விசாரணைக்கு தயாரில்லையெனக் கடைக்காரர் சார்பில் தெரிவிக்கப்பட்டது. ஆணையாளர் தரப்புக்கு வழக்கு செலவாக 200 ரூபா கட்டுமாறு நீதிபதி கட்டளையிட்டு வழக்கை ஒத்திவைத்தார். இதனைத் தொடர்ந்து நடத்த பேச்சுவார்த்தையின் பின்னர் 25 வீதம் குறைத்து கடைகளைப் பெற கடைக்காரர் சம்மதம் தெரிவித்துள்ளனர்.

பழைய கடைக்காரர்களுக்கு வழங்கவிருக்கும் 7 கடைகளை தவிர நவீனமார்க்கட்டிலுள்ள கடைகள் யாவும் ரெண்டர் முறைப்படியே வழங்கப்படவிருக்கிறது. [ச]

## ஈரானில் கதவடைப்பு!

தெஹ்ரான், மார்ச் 20

ஈரான்நாட்டிலுள்ள சகல வெளிநாட்டு ஊழியர்களும் இவ்வருடம் ஜூன் மாதம் 21ம் திகதிக்குள் நாட்டை விட்டு வெளியேறவேண்டும் என்று ஈரானிய தொழில் அமைச்சு இன்று உத்தரவிட்டுள்ளது.

## பாரதப்பிரதம ...

[1ம் பக்கத் தொடர்ச்சி

குள்ள அரசியல் கட்சிகளுக்கிடையே தொடர்புஉண்டா?’ என்று ஒரு நிருபர் கேட்டதற்கு; ‘தொடர்புகள் இல்லை. ஆனால் உணர்வுகளை மறைக்க முடியுமா?’ என்றார் அமிர்.

### எனது விஜய நோக்கம்

‘உங்களின் இந்திய விஜய நோக்கம் என்ன? என்று கேட்கப்பட்டதற்கு;

“தார்மீக ஆதரவு பெறவே நாம் இங்கு வந்துள்ளோம்’’ என்று கூறிய திரு. அமிர்தலிங்கம்;

“உங்களின் பிரதமர் எமது நாட்டுக்கு வந்தபோது. இலங்கைத் தமிழரின் பிரச்னைகளைத் தெளிவாக அவரிடம்கூறியிருந்தோம். பல துறைகளிலும் இலங்கைத் தமிழருக்கு ஏற்படும் பாதிப்பு, திட்டமிட்ட குடியேற்றம் மூலம் தமிழரை, அவர்தம் பிரதேசங்களிலேயே சிறுபான்மையினராக்கும் சூழ்ச்சி பற்றியும் தெளிவாக விரிவாகக் கூறியிருந்தோம். எமது பிரச்னைகளைப்பற்றி அறிந்து கொண்ட பிரதமர் தம்மால் முடிந்தவற்றை செய்வதாக—எமது பிரச்னைகளில் தலையிடுவதாகக் கூறியிருந்தார். இம்மாதம் 23ம் திகதி புதுடில்லியில் பிரதமரைச் சந்திக்கும்போது அவரின் தலையீட்டை வற்புறுத்துவேன். எமது விஷயத்தில் தலையிட்டு, நீதிகிடைக்க வழிசெய்யுமாறு வற்புறுத்துவேன்’’ என்று கூறினார்.

### இந்திராவை சந்திப்பார்

ஒரு கட்டத்தில் திரு. அமிர்தலிங்கம், முன்னாள் பாரதப் பிரதமர் திருமதி இந்திரா காந்தியையும் தாம் சந்திக்க விரும்பதாகக் கூறினார். [ம]

சாரதிகள், தொழிலாளர்களாக கடமையாற்றியவர்கள் ஏப்ரல் மாதம் 21ம் திகதிக்கு முன்பாகவும், மற்றைய வெளிநாட்டு ஊழியர்கள் ஜூன் மாதம் 21ம் திகதிக்கு முன்னதாகவும் வெளியேறவேண்டும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது

## பொலிஸார்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

னர் இதுதொடர்பாக நடவடிக்கை எடுத்தார். இதனால் பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவர் தற்காலிக வேலைநீக்கம் செய்யப்பட்டார்.

இதனைத் தொடர்ந்து கொழும்பில் நடந்த விசாரணையின் பின்னர் அக்கான்ஸ்டபிள் வேலைநீக்கம் செய்யப்பட்டார். இதன் காரணமாகவே பொலிசார் ஆட்சேப ஊர்வலம் நடத்தியதாக கூறப்படுகிறது.

சாதாரண உடையில் சென்ற இவர்கள், யாழ். நாகவிகாரை அதிபதியைச் சந்தித்து ஆட்சேபத்தை தெரிவித்தனர்.

தங்களுக்கு அநீதிநடப்பதாகவும் கடமையை செய்தால் வேலைநீக்கம் செய்யப்படுவதாகவும் அவர்கள் நாகவிகாரை அதிபதியிடம் கூறியதாக தெரியவருகிறது.

## பிஸ்கால் விற்பனை

யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றத்தில்

வைத்திலிங்கம் சிங்கவேலு கல்வளை சண்டிலிப்பாய்.

வழக்காளி-மனுதார்.

இல. காசு/561

எதிராக

1. தாமோதரம்பிள்ளை சங்கரப்பிள்ளை, பிரம்படி கொக்குவில்.

2. இளையபூரணம் குணராசா, பகவதி கோவிலடி கரவெட்டி.

எதிராளிகள்- எதிர்வாதிகள்

14-3-79ல் நீதிமன்றினால் இடப்பட்ட கட்டளையின் பிரகாரம் யாழ். மாவட்ட நீதிமன்ற பிஸ்கால் ஆல் எதிராளியிடம் இருந்து மேற்குறிப்பிட்ட வழக்கில் கைப்பற்றிய 22ஸ்ரீ 8647 இலக்கம் கொண்ட லொறி பகிரங்க ஏலத்தில் 1979 ம் ஆண்டு சித்திரை மாதம் 11ந் திகதி காலை 10-00 மணிக்கு யாழ் மாவட்ட நீதிமன்ற வளவுக்குள் வைத்து விற்பனை செய்யப்படும்.

பி. பாக்கியநாதன்,
பிஸ்கால்,

மாவட்ட நீதிமன்றம்,
யாழ்ப்பாணம்,

1961

இப்பத்திரிகை ‘ஈழநாடு’ லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி 63-ம் இலக்க அச்சகத்தில் 1979-ம் ஆண்டு மார்ச் மாதம் 21-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a Newspaper at the General Post Office Sri Lanka under No QB/8945/78 The Eelanaadu P B No: 49, Telegram: Eelanaadu, Telephone: 389,